**உலகலாவிய வெளியீட்டு அடிப்படை உதவி பங்குடமை செயற்திட்டம் - 2019**

உலகலாவிய வெளியீட்டு அடிப்படை உதவி பங்குடமை செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 திசெம்பர் 27 ஆம் திகதிய ரீஎவ் 099870 ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் II (பீ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

உலகலாவிய வெளியீட்டு அடிப்படை உதவி பங்குடமை செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாவிருந்த தற்போதைய நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. வீட்டுரிமையாளர் மட்டத்தில் இருக்கின்ற மற்றும் புதிய சாக்கடை வலையமைப்புக்களுடன் சாக்கடை வீட்டு இணைப்புக்கள் அதிகரிப்பதன் மூலம் கொழும்பு பெரும்பாகத்தில் குறைந்த வருமான வீட்டுரிமையாளர்களிற்கு அதன் சுகாதார சேவைகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. மானிய உடன்படிக்கையின் பிரகாரம், மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,537.15 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 12.93 மில்லியன் ஆக உள்ளதுடன் அதில் ரூபா 561.81 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 4.89 மில்லியன் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 திசெம்பரில் தொடங்கியிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் செயற்திட்டக் காலப்பகுதி 2019 மார்ச் 31 வரை 03 தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்கு ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட ரூபா 187.06 மில்லியன் கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி நிதிக்கூற்றுக்களில் புறம்பாக காட்டுவதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கத்திடமிருந்தான பெறப்பட்ட பங்களிப்புகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது. | இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பு குறைத்துக் கூறப்பட்டது. | அரசாங்கத்தின் பங்களிப்பு பெறுகைகளிற்கு எதிராக பெறுமதி சேர் வரி சரிசெய்வது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் கொள்கையாக உள்ளது. இந்த விடயம் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியம கண்காணிப்பு சபையுடன் தொடர்புபட்டுள்ளதுடன் அவர்களுடைய அறிவுறுத்தல்கள் இணைப்பு 01 இல் உள்ளன. | அரசாங்கத்தின் மொத்த பங்களிப்பையும் வெளிப்படுத்துவதற்கு இயலக் கூடியவாறு உரிய கிரயம் நிதிக்கூற்றிற்கு கொண்டுவரப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது பொது திறைசேரிக்கு உலக வங்கியிடமிருந்து ரூபா 198.93 மில்லியன் தொகையான மீளளிக்க வேண்டிய வெளிநாட்டு மானியங்கள் பெறப்பட்ட போதிலும் செயற்திட்டத்தால் ரூபா 71.4 மில்லியன் தொகை மாத்திரம் பெறப்பட்டதுடன் ரூபா 127.53 மில்லியன் மீதித் தொகை பொது திறைசேரியிடமிருந்து பெற வேண்டியவையாக காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவால், உலக வங்கி மானிய கணக்கு செயற்திட்டத்தின் நிதி நிலமையில் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நிதி நிலமைக் கூற்றில் ரூபா 127.53 மில்லியனால் உலக வங்கி மானியம் குறைத்துக் கூறப்பட்டது. | பொது திறைசேரிக்கு ரூபா 198.92 மில்லயன் தொகை பெறப்பட்ட போதிலும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு ரூபா 137.74 மில்லியன் இன்னமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இது பொது திறைசேரியால் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செலுத்த வேண்டியவையாகவும் பதியன்னட்டிருக்கவில்லை. இது பௌதீக ரீதியாக பெறப்பட்ட தொகை மானியமாக பெறப்பட்டிருந்தவை செயற்திட்ட | உலக வங்கியின் மொத்த பங்களிப்பையும் வெளிப்படுத்துவதற்கு இயலக் கூடியவாறு உரிய கிரயம் நிதிக்கூற்றிற்கு கொண்டுவரப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காலத்தின் பின்னர் பயன்படுத்த முடியாதிருக்கும். | |
| (இ) வெளிநாட்டு மானியம் மற்றும் அரசாங்க மானியம் என்பவற்றின் பங்களிப்பு எல்கேஎஸ் 01 இன் 45 ஆம் பிரிவுடன் இணங்கி புறம்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எல்கேஎஸ் 01 இன் 45 ஆம் பந்தியுடன் இணங்கியிருக்கவில்லை | பௌதீக ரீதியாக பெறப்பட்ட வெளிநாட்டு மானியம் ரூபா 563,188 மில்லியனாக உள்ளதுடன் அரசாங்க மானியம் ரூபா 569.97 மில்லியனாக உள்ளது. விபரங்கள் இணைப்பு 2 இல் வழங்கப்பட்டுள்ளது. | எல்கேஎஸ் 01 இலுள்ள ஏற்பாடுகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

வெளியீடு 01 இன் கீழ் ஆரம்பத்தில் 13,107 எண்ணிக்கையான கழிவகற்றல் இணைப்புகள் மற்றும் வெளியீடு 02 இன் கீழ் 2,300 எண்ணிக்கையான நேரடி முன்னேற்றங்கள் என்பவற்றினை அடைவதையே செயற்திட்டம் திட்டமிட்டிருந்தது. எவ்வாறாயினும், கழிவகற்றல் இணைப்புகளின் எண்ணிக்கை கழிவகற்றல் எண்ணிக்கை மற்றும் செயற்திட்ட கிரயம் என்பன அதிகரித்தமைால் பின்னர் வெளியீடு 01 இன் கீழ் 13,107 இலிருந்து 5,015 இற்கு கழிவகற்றல் இணைப்புகள் மற்றும் வெளியீடு 02 இன் கீழ் 2,300 இலிருந்து 3,785 இற்கு நேரடி முன்னேற்றங்கள் என்பன திருத்தப்பட்டிருந்தது.

| கூறு | நடவடிக்கை | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக முன்னேற்றம் | | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | அடையப்பட்டது | | | |
| (அ) கழிவகற்றல் இணைப்புகள் (வெளியீடு 01) | இணைப்புகள் | 5,015 | 4,793 | செயற்திட்ட காலப்பகுதி இறுதியில் இலக்கு அடையப் பட்டிருக்கவில்லை | வளவுகளிற்குள்ளான இணைப்புகள வெளியீடு 1அ2 மொறட்டுவ / இரத்மலானை மற்றும் ஜா-எல / எக்கல கழிநீல் அகற்றல் செயற்திட்டத்தால் மொறட்டுவ / இரத்மலானை பிரதான கழிவகற்றலின் பகுதியளவான பூர்த்தியாக்கல் காரணமாக 750 இலிருந்து 336 இற்கு | செயற்திட்ட காலப்பகுதிக்குள் இலக்குகளை அடைவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | குறைக்கப்பட்டிருந்தது. ஆனால், வெளியீடு 1அ1 மற்றும் வெளியீடு 1இ1 இலக்கிடப்பட்டதை விட வெளியீடு 1அ1 அதிகம் 32 மேலதிக இணைப்புகள் தொகை 173 இணைப்புகள் (மொத்தம் 898) வழங்கப்பட்டிருந்தது. இதனுடன் |
| (ஆ) நேரடி முன்னேற்றங்கள் (வெளியீடு 02) | கழிவகற்றல் பொறி பகுதிகளின் பொருத்துதல் | 3,785 | 3,554 | வெளயீடு 1 இன் கீழ் இலக்கிலிருந்து 95.57 சதவீதமாக உள்ள 4,793 இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த இலக்கு அடையப்பட்டிருந்த அதேநேரம் முறையாக வடிவமைக்கப்பட்ட எளிமையான சாக்கடை விவரிவாக்கல் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமைகள் (DEWATS) மற்றும் புதுமைகட்டாயமாக மிகவும் குறைந்த கிரயத்தில் கழிவு இணைப்புகள் உயர்தர வெற்றிகர புதிய புதுமையான அணுகுமுறைகள் என்பன அறிமுகப்படுத்தப்படுகின்றன. மேலும், அதற்கு மேல் இந்த செயற்திட்டம் வெளியீட்டு அடிப்படை உதவி (OBA) நிதியளிப்பு அணுகுமுறை மற்றும் புதிய தொழில்நுட்ப அணுகுமுறை என்பவற்றின் பிரயோகத்தை பரிசோதிப்பதற்கு முன்னோடி செயற்திட்டமாக அமுலாக்கப்பட்டிருந்தது.<br><br>வெளியீடு 2- நேரடி சுகாதார முன்னேற்ற கூறு புறநகர் சுகாதார தீர்வை வழங்குவதற்கு புதிய |

அணுகுமுறை ஒன்றாக இருந்ததுடன் புனித பகுதியளான மத்தியமயப்படுத்தப்பட்ட அல்லது பன்முகப்படுத்தப்பட்ட முறைமைகள் சாத்தியமாக இருக்கவில்லை. இதில் புதிய உப செயற்திட்டம் புதிய தொழில்நுட்ப அணுகுமுறை வெற்றிகரமாக அமுலாக்கப்பட்டிருந்தது. அதேநேரம் புதிய முறைமை பராமரிப்பிற்காக அரச தனியார் பங்குபற்றல் முன்னோடியாகவிருக்கின்றன. இந்த செயற்திட்டம் செயற்பட வேண்டியிருந்த அதேநேரம் 3,500 இற்கும் மேற்பட்ட வீட்டுரிமை நலனாளிகளை தெரிவு செய்வதற்கு அரச மற்றும் ஏனைய பங்குடமையாளர்களை இணைக்கின்றன. நேரடி சுகாதார முன்னேற்ற கூறு செயற் திட்டத்திற்காக புதிய வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பம் அமுலாக்க வேண்டியிருந்த அதேநேரம் முன் அநுபவம் கொண்டிருக்காமை காரணமாக தீர்வுகாணுதல் கடிணமாக உள்ளது. கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் 7 பிரிவுகளில் 3,554 அமைவிடங்களில் வேலைத்தளம் புனிதமயப்படுத்தப்பட்டிருருந்தது. மேற் குறிப்பட்ட சவால்கள் இருந்த போதிலும் 3,554 வசதிகள் வழங்கப்பட்டிருந்தன.

### 3.2. சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2019 மார்ச் அளவில் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் மீளளிக்க வேண்டிய வெளிநாட்டு மானியத்திற்கான இறுதி திகதி 2019 யூலையாக இருந்தது. எவ்வாறாயினும், 2020 யூன் 30 வரையும் சொத்துக்களை மூலதனமாக்குவதற்கும் கணக்கொழிப்பு கணக்குகளை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கொழிப்பு கணக்குகளை தயாரிப்பதில் தாமதம் | செயற்திட்டத்திற்கான மூலதனமாக்கல் ஏற்கனவே தொடங்கப்பட்டிருந்ததுடன் சகல மூலதனமாக்கல் வேலைகளும் 2020 ஆம் ஆண்டிற்குள் பூர்த்தியாக்கப்படும். | தாமதமில்லிாமல் சொத்துக்களை மூலதனமாக்குவதற்கும் கணக்கொழிப்பு கணக்குகளை தயாரிப்பதற்கும் உடனடியாக நடவடிக்கை வேண்டும். |
| (ஆ) 2019 மே 21 இல் வெளிநாட்டு மானியத்தின் இறுதி மீளளிப்பு பெறப்பட்ட போதிலும் நேர சுகாதார முன்னேற்ற பொதி 3சீ இன் நிர்மாண ஒப்பந்தத்தின் இறுதி பட்டியல் தீர்ப்பதற்கு 2020 யூன் 30 வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கொழிப்பு கணக்குகளை தயாரிப்பதில் தாமதம் | ஒப்பந்தத்தின் இறுதி பட்டியல் ஒப்பந்தகாரரால் தயாரிக்கப்பட்டிருந்தது. பிடிகாசு விடுவிப்பின் சகல குறைபாடுகளையும் திருத்துவதற்கு ஒப்பந்தகாரருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தது. | தாமதமில்லாமல் நிலுவையாகவிருக்கின்ற கொடுப்பனவுகளை தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2010 யூலையின் 05 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளின் நிதி மற்றும் பௌதீக செயற்பாடுகள் மீதான நலிவான உள்ளக கட்டுப்பாடு செயற்திட்ட செயலாற்றலை | 2016 ஆம் ஆண்டிற்காக உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் 2019.02.06 இல் அறிகை சமர்ப்பிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டிற்கான இறுதி | உள்ளக கணக்காய்வை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பாதகமாக பாதிக்கும். | கணக்காய்வு 2020 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் தொடங்கப்பட்டதுடன் கணக்காய்வு வேலைகள் கோவிட் 19 நோய் தொற்று நிலைமை காரணமாக தாமதப்பட்டிருந்தது. இறுதிக் கணக்காய்வு செய்யப்பட வேண்டியதுடன் உள்ளக கணக்காய்வு பிரிவால் மிக விரைவில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். . | |
| (ஆ) | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன் நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்காக நிலையான சொத்து மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் மீதான நலிவான உள்ளக கட்டுப்பாடு செயற்றிட்ட செயலாற்றலை பாதகமாக பாதிக்கும். | நேரடியாக கொள்வனவு செய்யப்பட்ட சகல விடயங்களும் பொருளிருப்பு பதிவேட்டில் பேணப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரரால் கையளிக்கப்பட்ட விடயங்களும் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டதுடன தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு பொருளிருப்பு விடயமாக மாற்றப்பட்டன. நிலையான சொத்து மெய்மையாய்வு 2015 இல் நடாத்தப்பட்டதுடன் நிலையான சொத்து மெய்மையாய்வு நடாத்தப்படும். | நிலையான சொத்துப் பதிவேட்டினை பேணுவதற்கும் உரிய நேரத்தில் கணிப்பீட்டு சபை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |